பதிவு எண்: M. 6311 ★ தொலைபேசி: 51331 நிறுவியது: 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ. எம்.பி.

மலர்: 16] சென்னை: ஆவணி 8 (23—8—68) வெள்ளி ★ வெளியூர்: ஆவணி 9 (24—8—68) சனி [இதழ்: 59

பஞ்சாபிலும் குடியரசுத்தலைவர் ஆட்சி

புதுடில்லி, ஆக. 22—

பஞ்சாபில் குடியரசுத் தலைவர் ஆட்சி ஏற்படுத்தப்பட வேண்டுமென்றும், பின்னர் புதிதாகத் தேர்தல்கள் நடத்தப்பட வேண்டும் என்றும் மாநில ஆளுநர் சிபாரிசு செய்திருக்கிறார்.

பஞ்சாப் அரசியல் நிலைமை பற்றிய ஆளுநரின் அறிக்கை குடியரசுத் தலைவருக்குக் கிடைத்து விட்டது.

கருத்திருமன்மீது உரிமைப் பிரச்சினை

கழக உறுப்பினர் அரங்கநாதன் எழுப்பினர்

நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை முன்கூட்டி பத்திரிகைகட்குக் கொடுத்ததாகக் குற்றச்சாட்டு

சென்னை, ஆக. 23—

தமிழகச் சட்டமன்ற எதிர்க் கட்சித் தலைவர் திரு. கருத்திருமன்மீது இன்று சட்டமன்றத்தில் ஓர் உரிமைப் பிரச்சினை எழுப்பப்பட்டது.

தி. மு. க. உறுப்பினர் திரு. ஆர். என். அரங்கநாதன் இந்த உரிமைப் பிரச்சினையைக் கொண்டுவந்தார்.

தி. மு. க. அரசுமீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவரப் போவதாகப் பத்திரிகைகளுக்குச் செய்தி தந்த எதிர்க் கட்சித் தலைவர் திரு. கருத்திருமன், நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவருவதற்கான காரணங்களையும் பத்திரிகைகளுக்குத் தந்திருப்பதாகவும், சட்டமன்றத்தில் கொண்டுவரப்படுவதற்குமுன், இவற்றைப் பத்திரிகைகளுக்கு வெளியிட்டது சட்டமன்ற விதிக்கும், ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கும் பாராளுமன்ற மரபுக்கும் எதிரான செயலாகும் என்றும் திரு. அரங்கநாதன் தமது உரிமைப் பிரச்சினையில் குறிப்பிட்டார்.

உரிமைப் பிரச்சினையை எழுப்பி, திரு. அரங்கநாதன் பேசுகையில் மேலும் தெரிவித்ததாவது:—

"நமது சட்டமன்ற வீதி மிகத் தெளிவாகக் கூறுகிறது—'மன்றத்தின் அனுமதி பெற்று, மன்றத்தில் கொண்டுவரப்படுவதற்கு முன் எந்த ஒரு விஷயத்தையும் முன்கூட்டிப் பத்திரிகைகளில் வெளியிடக்கூடாது' என்று.

இதேபோல் நாடாளுமன்றத்தில் அமைச்சர் வெளியிடயிருந்த ஓர் அறிக்கை முன்கூட்டியே பத்திரிகைகளில் வெளியிடப்பட்டது சம்பந்தமாக, ஓர் உரிமைப் பிரச்சினை கிளப்பப்பட்டு, மத்திய அரசின் செய்தித் துறை மன்னிப்புக் கேட்டபின் அப்பிரச்சினை அத்தோடு கைவிடப்பட்டது.

இதேபோல், ஒரிசா, பம்பாய், ஆந்திர மாநிலங்களின் சட்டமன்றங்களிலும் உரிமைப் பிரச்சினைகள் எழுப்பப்பட்டுத் தீர்ப்புக்கள் வழங்கப்பட்டுள்ளன.

இதே சட்டமன்றத்திலும், 1964-ம் ஆண்டில் இப்போதைய கல்வியமைச்சர் மாண்புமிகு நெடுஞ்செழியன் அவர்கள் எதிர்க் கட்சித் தலைவராக இருந்தபோது திரு. பக்தவத்சலம் ஆட்சிமீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவரப்பட்டது; அந்தத் தீர்மானத்தின் உள்ளடக்கம் பத்திரிகைகளில் வெளிவந்ததால், அதுபற்றி அப்போது திரு. நெடுஞ்செழியன் அவர்கள்மீது உரிமைப் பிரச்சினை எழுப்பப்பட்டது. அதே போலத்தான் இப்போது நானும் உரிமைப் பிரச்சினையை எதிர்க் கட்சித் தலைவர் திரு. கருத்திருமன்மீது எழுப்பியுள்ளேன். சட்ட விதிக்கும்--ஒப்புக்கொள்ளப்பட்டுள்ள மரபுக்கும் விரோதமாக எதிர்க் கட்சித் தலைவர் நடந்துகொண்டிருப்பதால், இப்பிரச்சினையில் நல்ல தீர்ப்பு வழங்க வேண்டுகிறேன்."

இரா. நெடுஞ்செழியன்

அரசுக் கட்சித் தலைவரும், கல்வியமைச்சருமான திரு இரா. நெடுஞ்செழியன் அவர்கள் கருத்தறிவிக்கையில், கூறியதாவது:—

"நான் எதிர்க் கட்சித் தலைவராக இருந்தபோது இதேபோல் பத்திரிகையில் வெளியான செய்தியின் விளைவாக என்மீது உரிமைப் பிரச்சினை எழுப்பப்பட்டது. நான் எந்தப் பத்திரிகைக்கும், செய்தி தரவில்லை என்பதையும், யாரிடமும் அதுபற்றி எதுவும் கூறவில்லை என்பதையும் திட்டவட்டமாகத் தெரிவித்தேன். அதன் பிறகு, எப்படி அந்தச் செய்தி வெளியாயிற்று என்று ஆராய்ந்து கண்டுபிடிக்க முடியாத நிலை ஏற்பட்டதால், அப்போதிருந்த சட்டமன்றத் தலைவர் பிரச்சினையை அத்துடன் தள்ளிவிட்டார்.

எனவே, இப்போதும் அதே போன்று பத்திரிகைகளில் வெளியிடப்பட்டிருப்பதால் இதனை உரிமைப் பிரச்சினையாக ஏற்றுத் தீர்ப்பு வழங்குமாறு கேட்டுக் கொள்கிறேன்."

கருத்திருமன்

எதிர்க் கட்சித் தலைவர் திரு. கருத்திருமன் இது பற்றித் தமது நிலையை விளக்குகையில், நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வரப்போவதாகத் தமது கட்சியின் முடிவைத்தான் தாம் பத்திரிகைக்குத் தெரிவித்ததாகவும், இங்கு கொண்டுவரப்பட்டுள்ள நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின் வாசகங்களைத் தெரிவிக்கவில்லை என்றும் பத்திரிகையில் வெளியாகியுள்ள செய்தியைத் தாம் தரவில்லை என்றும் கூறினர்.

உடனே திரு. அரங்கநாதன் எழுந்து, 'பத்திரிகைகளில் திரு. கருத்திருமன் கூறியதாகவே செய்தி வெளியாகியிருக்கிறது என்றும், இதுவரை இதற்கு அவர் மறுப்புத் தெரிவிக்கவில்லை என்றும் சுட்டிக்காட்டினர்.

திரு. கருத்திருமன், தாம் ஒரு திருமணத்திற்கு வெளியூர் சென்றிருந்ததால் பத்திரிகைகளைச் சரிவரப் பார்க்க முடியவில்லை என்று கூறினர்.

முதலமைச்சர் அண்ணா

உடனே முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்கள் எழுந்து, 'எதிர்க் கட்சித் தலைவர்தான் பத்திரிகைகளைப் பார்க்கவில்லையென்றால், துணைத் தலைவராவது மறுப்புத் தெரிவித்திருக்கலாம். துணைத் தலைவரும் திருமணத்துக்குச் சென்றுவிட்டாரா?" என்று கேட்டார்.

தீர்ப்பு ஒத்திவைப்பு

அவைத் தலைவர் இப்பிரச்சினையில் தமது தீர்ப்பை நாளை வழங்குவதாகக் கூறினர்கள்.

இரஷ்யாவின் தலையீட்டுக்கு எதிர்ப்பு

மேலை நாடுகளின் கண்டனத் தீர்மானம்

ஐ. நா., ஆக. 22—

செக்கோஸ்லோவேகியாவில் இரஷ்யாவின் தலையீட்டைக் கண்டித்தும், ஆக்கிரமிப்பாளர்கள் உடனே வெளியேற வேண்டுமெனக் கோரியும் ஏழு மேற்கத்திய நாடுகள், ஐ. நா. பாதுகாப்பு அவையில் தீர்மானம் ஒன்றைக் கொண்டுவந்திருக்கின்றன.

படை திரட்ட ருமேனியா உத்தரவு

வியன்னா, ஆக. 22—

ருமேனிய கம்யூனிஸ்டுக் கட்சித் தலைவரும் செக்கோஸ்லோவேகிய ஆட்சியை ஆதரித்துவந்தவருமான ருமேனிய அதிபர், படை திரட்டுமாறு தம்முடைய நாட்டிற்கு உத்தரவிட்டுள்ளார்.

செக்கோஸ்லோவேகியாவின் சுதந்தரத்திலும், அரசு உரிமையிலும் தலையிட்டதற்காக ஐந்து வார்சா ஒப்பந்த நாடுகளை அவர் கண்டித்தார்.

'பங்கீட்டு முறையை நீக்கிவிடும் காலம் இன்னும் உருவாகவில்லை'

'இந்த நிலையை உருவாக்கவே உணவு உற்பத்தியைத் தீவிரமாக்குகிறோம்'

சட்டமன்றத்தில் அமைச்சர் மதியழகன் விளக்கம்

சென்னை, ஆக. 23—

"உணவுப் பங்கீட்டை எடுத்துவிட வேண்டுமென்பதே அரசின் எண்ணமாகும்; ஆனால், அதற்குரிய நேரம் வரவில்லை; அந்நிலை உருவாகும் பொருட்டுத்தான் உணவு உற்பத்தி தீவிரமாக்கப்பட்டு வருகிறது.

"சென்னை, கோவை நகரங்களில் மட்டுமே மலிவு விலையில் அரிசி தரப்படுவதாகவும், மற்ற ஊர்களில் அதிக விலைக்கு விற்பதாகவும் கூறுவது தவறான கருத்தாகும்"

என்று உணவு அமைச்சர் கே. ஏ. மதியழகன் அவர்கள், சட்டமன்றத்தில் கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில் தெரிவித்தார். துணைக் கேள்விகளுக்குப் பதிலளிக்கையில், மேலும் அவர் குறிப்பிட்டதாவது:—

"சென்னை, கோவை நகரங்களில் ரூபாய்க்கு ஒரு படி அரிசி கிடைப்பதுடன், குடும்பக் கார்டு முறை அமுலில் உள்ள மற்ற இடங்களில் படி அரிசி ரூ. 1.17-க்குக் கிடைக்கிறது; இதனால், ஒரு கோடியே 27 இலட்சம் மக்கள் பயனடைகின்றனர். நீலகிரி, கன்னியாகுமரி மாவட்டங்களில் மட்டும் படி அரிசி ரூ. 1.22-க்கு விற்கப்படுகிறது.

பல ஊர்களில் படி அரிசி ஒரு ரூபாய்க்குக் குறைவாகக் கிடைத்து வருவதால், படி அரிசித் திட்டத்தை விரிவுபடுத்த வேண்டிய அவசியமில்லை."

"குறைந்த விலைக்கு விற்கப்பட வேண்டிய இரண்டாம் ரக அரிசி பட்டணம் படி ரூ 1.07 என்ற விலைக்கு விற்கப்படுகிறது என்பதை அமைச்சர் அறிவாரா?"

என்று கேட்கப்பட்ட கேள்விக்கு அமைச்சர் பதிலளித்ததாவது:—

"அப்படிக் கூறுவது சரியல்ல; கிலோ 66 காசுக்கு—அதாவது, ஒரு படி (1.52 கிலோ) ஒரு ரூபாய்க்குத்தான் விற்கப்படுகிறது."

'சேனை'களின் நடவடிக்கைகள்

கட்டுப்படுத்தத் திட்டம்

புதுடில்லி, ஆக. 22—

"பல்வேறு 'சேனை'களின் நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்த இந்தியா முழுவதுக்குமாக ஒரு நிறுவனம் ஏற்படுத்துவதுபற்றி

(4-ம் பக்கம் பார்க்க)

எவ்வழியேனும் இந்தியைத் திணிக்க முயற்சிக்கின்றனர்

மத்திய அரசின் செயல் வேதனையைத்தான் தருகிறது

'தடுத்து நிறுத்தும் உணர்ச்சி இருக்கிறது'--- முதலமைச்சர் அண்ணா விளக்கம்

சென்னை, ஆக. 22—

"இந்தியை ஏதாவது ஒரு வழியில் திணிப்பதற்கு ஆயிரத்தெட்டு வழிகளில் மத்திய அரசும்--- அவர்களது அலுவலர்களும் ஈடுபட்டு வருவதை அன்றாடம் பத்திரிகைகளில் படிக்கும்போது வேதனையாக இருக்கிறது!

"என்னுடைய வலிவு, இங்கே இந்தியை அனுமதிக்காமலிருக்கும் அளவுக்குத்தான் இப்போது இருக்கிறது.

"மொழிப் பிரச்சினையில் தமிழக அரசு எடுத்த முடிவை ஆதரித்த இராஜா சர். முத்தையா, 'இந்தியைத் திணிப்பதற்கு டில்லியில் பல முயற்சிகள் நடைபெறுகின்றனவே---அது குறித்து நீங்கள் என்ன செய்தீர்கள்' என்று கேட்டார்; அவரைப் போன்றவர்கள் ஆதரித்தால், இந்தித் திணிப்பு முயற்சிகளைத் தடுத்து நிறுத்துவதற்கான வழிபிறக்கும்---அதற்கான உணர்ச்சி இங்கே இருக்கிறது"

என்று முதலமைச்சர் அண்ணா அவர்கள், சட்டமன்ற மேலவையில், நிதி ஒதுக்கல் மசோதாமீது நடைபெற்ற விவாதங்களுக்குப் பதிலளிக்கையில் சுட்டிக்காட்டித் தெரிவித்தார்.

திரைப்பட அரங்குகள்

அரசு ஏற்று நடத்தும் உத்தேசம் இல்லை

சென்னை, ஆக. 22—

"மாநிலத்திலுள்ள திரைப்பட அரங்குகளை அரசே ஏற்று நடத்தும் சொற்குறிப்பு எதுவும் அரசிடம் இல்லை"

என்று சட்டமன்றத்தில், அமைச்சர் சத்தியவாணிமுத்து அவர்கள், கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில் தெரிவித்தார்.

கேள்வி:— "திரைப்படக் கொட்டகைகளில் டிக்கெட் கட்டணம் அதிகமாக இருப்பதால், நல்ல படங்களை ஏழைகள் பார்க்க முடிவதில்லை; அரசாங்கமே திரைப்பட அரங்குகளைக் கட்டினால், குறைந்த கட்டணத்தில் ஏழைகளும் பார்க்கமுடியுமல்லவா?"

அமைச்சர்:— "அரசாங்கமே திரைப் பட அரங்குகள் கட்டும் எண்ணமில்லை."

நம்நாடு

இரா.செழியன்

திருவள்ளுவராண்டு 1999 ஆவணி 8 (23—8—68) வெள்ளி

பரிசுச் சீட்டு வாங்கிவிட்டீர்களா?

'பரிசுச் சீட்டு வாங்கிவிட்டீர்களா ?' என்ற கேள்வியை, தங்களுக்குள்ளாக ஒவ்வொருவரும் கேட்டுக்கொள்ள வேண்டும். இவ்வாறு நமமில் ஒவ்வொருவரும் கேட்டுக்கொள்ள வேண்டிய வாய்ப்பினை நமது அரசு நமக்கு இப்பொழுது வழங்கியிருக்கிறது.

பரிசுச் சீட்டு ஏற்பாடு ஒன்றை, நமது அரசு துவங்கியிருக்கிறது. புனிதமான சுதந்தர நாளன்று, பரிசுச் சீட்டு விற்பனையைத் தமிழக முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்கள் துவக்கி வைத்திருக்கின்றார்.

முதலமைச்சர் அவர்களிடமிருந்து 20 சீட்டுகள் கொண்ட பரிசுச் சீட்டுக் கட்டு ஒன்றை, நமது தமிழக ஆளுநர் அவர்கள் முதன்முதலாக விலை கொடுதது வாங்கியுள்ளார். ஆளுநர் அவர்கள் பரிசுச் சீட்டை வாங்கிக்கொண்டபோது, 'எனக்கு ஒரு பரிசு விழக் கூடாது' என வாய்விட்டுக் கூறிக்கொண்டே வாங்கியுள்ளார்.

ஆளுநர் வெளியிட்டதைக் கேட்டுக்கொண்டிருந்த முதலமைச்சர், 'ஆளுநருக்கு முதல் பரிசு விழுந்தால், அந்த இலட்சம் ரூபாயையும் செஞ்சிலுவைச் சங்கத்துக்கு நன்கொடையாகக் கொடுத்துவிடுவது நல்லது' என்றார். முதலமைச்சரின் வேண்டுகோளுக்கு ஆளுநர், தமது ஒப்புதலைத் தெரிவித்துள்ளார்.

இந்தப் பரிசுச் சீட்டு ஏற்பாட்டை, தமிழக அரசு ஏன் மேற்கொள்ளவேண்டும்? இவ்வேற்பாட்டில் கிடைக்கின்ற தொகையைத் தமிழக அரசு, எந்தப் பணிகளுக்குச் செலவழிக்க உள்ளது?

முதலமைச்சரும் ஆளுநரும், இதற்கு விளக்கம் கூறியுள்ளனர்.

இப்பரிசுச் சீட்டுத் துவக்க விற்பனை விழாவில் பங்குகொண்ட ஆளுநர் அவர்கள், இவ்வேற்பாடு பற்றிய விளக்கத்தைக் கூறிய அதே நேரத்தில், தமிழக அரசின் பணிகளுக்குப் பாராட்டுத் தெரிவித்திருக்கின்றார். பரிசுச் சீட்டு ஏற்பாட்டின் மூலம் கிடைக்கக் கூடிய தொகை, எதற்குச் செலவிடப்படும் என்பதைக் குறித்து ஆளுநர் அவர்கள் தொடர்ந்து கூறியுள்ளதாவது :—

"பாசனம், மின்சாரம், விவசாய உற்பத்தி போன்ற முக்கிய துறைகளில், திட்டமிட்டபடி முன்னேறி இலட்சியய இலக்கை அடையும்வண்ணம் இந்த மாநில நிர்வாகம் சிறப்பாகப் பணியாற்றியுள்ளது குறித்து அனைவரும் மனநிறைவு கொள்ள முடியும்.

"நமது மாநிலத்திற்கு நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்திற்கு உத்தேச மதிப்பீட்டுச் செலவு ரூ. 564 கோடி என்று நிர்ணயிக்கப்பட்டதைத் தொடர்ந்து அதற்கு நம் பங்காக ரூ. 105 கோடியைத் திரட்ட வழிவகை கண்டாக வேண்டியிருக்கிறது.

"இந்த மாநில அரசைப் பொறுத்தவரையில் இன்றியமையாப் பண்டங்கள் நியாய விலைக்குத் தங்குதடையின்றி மக்களுக்குக் கிடைப்பதற்கான எல்லா நடவடிக்கைகளையும் எடுத்திருக்கிறது. கொள்முதல் திட்டம் சிறப்பாக நிறைவேற்றப்பட்டதன் மூலம் உணவுத் தானிய விநியோகம் தங்குதடையின்றி சீராக நடைபெற்றுள்ளது.

"விலைக் கட்டுப்பாடல்லாத வெளிச் சந்தைகளில்கூட உணவுத்தானிய வகைகளின் விலை உயராமல் பார்த்துக்கொண்டு, அவை நியாய விலைக்குக் கிடைக்க மாநில அரசு நடவடிக்கை எடுத்துள்ளது. மற்ற மாநிலங்களைவிடத் தமிழகத்தில்தான் இப்படிச் சீரான—உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன.

"அரசாங்கச் சிப்பந்திகளுக்குக் கூடுதலாகப் பஞ்சப் படி உயர்த்தியது — நகர ஈட்டுப் படி வழங்கியது ஆகியவற்றினால் அரசாங்க நிதி நிலையில் பெருத்த சிரமம இருந்தபோதிலும், அவை காரணமாக வளர்ச்சித் திட்டங்களை நிறைவேற்றுவதற்குக் குந்தகம் ஏற்படாதவாறு பார்த்துக் கொள்ளப்பட்டிருக்கிறது.

"இந்நிலையில், அரசின் வருவாயைப் பெருக்கிக்கொள்ள வேண்டியதன் அவசியத்தை அனைவரும் உணரவேண்டும். வரி விதிப்பது — போதுக் கடன் எழுப்புவது — சிறு சேமிப்பு ஆகிய திட்டங்களின் மூலம் மட்டுமன்றி வேறு வகையிலும் அரசின் வருவாயைப் பெருக்கிக் கொள்ளும் வழிவகைகளைக் காணவேண்டும். இந்த நோக்கத்துடன்தான் பரிசுச் சீட்டுத் திட்டம் கோண்டுவரப்பட்டுள்ளது. ஏழைகளும் பங்கு பெறும் வகையில் பரிசுச் சீட்டின் விலை ஒரு ரூபாய் என்று நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

"சமுதாய மேம்பாட்டுக்காகவும், வளர்ச்சித் திட்டங்களுக்குச் செலவிடுவதற்காகவும் கோண்டுவரப்பட்டுள்ள இந்தப் பரிசுச் சீட்டு ஏற்பாட்டிற்குக் கிராம மக்களும், நகர மக்களும் முழு ஆதரவு கோடுக்க வேண்டும்; திட்டம் வெற்றி பெறச் செய்யவேண்டும்."

இவ்விழாவிற்குத் தலைமைதாங்கிய முதலமைச்சர் அண்ணா அவர்கள், 'இப்பரிசுச் சீட்டு ஏற்பாட்டின் வாயிலாக அரசுக்குக் கிடைக்கக்கூடிய தொகை, கல்வித்துறை — மருத்துவத்துறை போன்ற சமுதாய மேம்பாட்டுக்கான துறைகளில் செலவழிக்கப்படும்' என்ற கருத்தைக் கூறினர். இப்பரிசுச் சீட்டை, அமைச்சர்கள் எவரும் வாங்கக்கூடாது என முடிவுகட்டியுள்ளதாகவும் முதலமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள்.

இப்பரிசுச் சீட்டு ஏற்பாட்டைக் குறித்து மேலும் முதலமைச்சர் அவர்கள்,

"இந்தப் பரிசுச் சீட்டுத் திட்டம் பற்றி எல்லா நாடுகளிலும் தகவல் சேகரிக்கப்பட்டுப் பரிசீலித்து நமக்கு ஏற்ற முறையில் அமைக்கப்பட்டுள்ளது. பரிசுத் தொகையும் பெரிய வகையில் — அதிக அளவில் அமைக்கப்பட்டிருக்கிறது"

என்றும்,

"மலேசியா நாட்டில் மிகச் செல்வாக்குடன் இப்பரிசுச் சீட்டுத் திட்டம் வெற்றிகரமாக நடைபெறுகிறது. ஒரு ரூபாய் கொடுத்துப் பரிசுச் சீட்டு வாங்குவதில் பரிசு கிடைக்கலாம என்பதுடன் மட்டுமன்றி, இத்திட்டத்தின நோக்கம கல்வி, மருத்துவம போன்ற சமுதாய நலத் துறைகளுக்குப் பயன்பட வேண்டும என்பதாகும்.

"திட்டத்தில் பங்கு பெற்று பரிசுச் சீட்டு வாங்கும் ஒவ்வொருவரும் 'நான கொடுக்கும் ஒரு ரூபாய் ஒரு மருத்துவமனை அமைய — கல்லூரி ஏறபடப் பயன் படும்' என்று உணாந்தால், அவை அமைந்து காணும் போதெல்லாம் ஒரு பெருமித உணர்ச்சி ஏற்படும்"

என்றும் கூறியுள்ளார்.

இப்பரிசுச் சீட்டைப் பெறுகின்றவர்களுக்குப் பரிசு கிடைத்திட்டாலும கிடைககாமற்போனாலும, நாட்டு மக்களின் நல்வாழ்வுககாக அரசு செலவிடக்கூடிய பெருந்தொகையில், பரிசுச் சீட்டை வாங்கியதன் வாயிலாக நம்முடைய சிறு தொகையும் சேர்ந்திருககினறதே' என, மகிழ்ச்சியும மனநிறைவும பெருதவர்கள் இருககமுடியாது.

"நமது சகோதரர்களின் எதிர்கால நல்வாழ்விற்காக, நம்மால் ஆன நிதி உதவியைச் செய்கிறோம்" என்ற உணர்வுடன், ஒவ்வொருவரும் 'பரிசுச் சீட்டுகளை—தங்கள் பொருளாதார வசதிக்கேற்ப—வாங்க முனவர வேணடும. 'பரிசுச் சீடடு வாங்காதவர் பலா இருககின்றனர்' என்ற பேச்சுக்கே இடமிருக்கக கூடாது. 'பரிசுச் சீட்டு வாங்கிவிட்டீர்களா' என்ற கேள்வியை நமமில் ஒவ்வொருவரும் தங்களுக்குள்ளாகக் கேட்டுககொள்ளுகின்ற பொழுதே, பரிசுச் சீட்டுக்காகச் செலவிடுகின்ற ஒவ்வொரு ரூபாயும், நமது சகோதரர்களின் எதிர்கால வாழ்வை வளமுள்ளதாக ஆக்க உதவப்போகிறது' என்ற மகிழ்ச்சியைப் பெறவேண்டும். பரிசுச் சீடடுத் திட்டத்தில் நமது முதலமைச்சர் அண்ணா அவர்கள் இதைத்தான் நம்மிடம் எதிர்பார்க்கின்றார்.

—கா. க.

சிலைகள் பற்றிச் சில...!

[எஸ். ஆர்.]

"காங்கிரசார் ஆகஸ்டு 1-ந் தேதி நடத்திய ஊர்வலத்துக்கும்—4-ந் தேதி நடத்திய ஊர்வலத்துக்கும உள்ள ஓர் ஒற்றுமையைக் கூற முடியுமா ?"

"முடியும் ; மவுண்ட்ரோடில், அண்ணா உருவச் சிலையைக் கடக்காமல் அவர்களது எந்த ஊர்வலமும் அமைவதில்லை. துடிக்கும் இரத்தத்துக்குக் கொதிக்கும் சூடு தரவே அந்த முறை !"

"சரி ; இரண்டு ஊர்வலங்களும் மொத்தமாகக் காட்டும் முடிவு ஏதாவது உண்டா ?"

"உண்டு ; 'காமராசர் காவலு'டன் நடந்தால் தான், காங்கிரசார் ஊர்வலததில் கட்டுப்பாடு இருக்கும் ; பண்பாடு காப்பாற்றப்படும் ; இல்லையேல், தலைகுனிவுதான் — செருப்பு வீச்சுதான் — கறுப்புத் துணி வீசல்கள்தான் ! ஆகஸ்டு 1-ந் தேதியும், 4-ந் தேதியும் நடைபெற்ற காங்கிரசு ஊர்வலம் இதனைத்தான் காட்டுகின்றன !"

"'இந்த வீண் வம்புகளெல்லாம் எதற்கு ? பேசாமல் மவுண்ட் ரோடில் உள்ள காமராசர், அண்ணா ஆகிய இருவரது சிலைகளையும் அப்புறப்படுத்திவிடலாமே' என 'விகடன்' இதழ் தலையங்கம் எழுதியிருக்கிறதே — அதுபற்றி என்ன கூறுகிறீர்கள் ?"

"கூறுவதற்கு என்ன இருக்கிறது ? மூட்டைப் பூச்சிக்குப் பயந்து வீட்டைக் கொளுத்தியவனின் கதையாகத்தான் 'விகடன்' தலையங்கத்தின் விவேகம் இருக்கிறது !"

"கடந்த சில காலமாக அவ்வப்போது ஆபத்து நிலைகள் ஏற்பட்டுவருவது அண்ணா சிலைக்கும், அண்ணா உருவப் படத்துக்கும்தான் ; ஆனால், அண்ணா சிலைக்கு அருகில் உள்ள காமராசர் சிலையினையும் அப்புறப்படுத்திவிடலாம் என, 'விகடன்' ஏன் யோசனை கூறவேண்டும் ?"

"இது தெரியாமல், 'ஏன்' என்று வேறு கேட்கிறீர்களே ! உங்களுக்குத் தெரியாதா— 'காமராசர் சிலையை அகற்ற வேண்டும்' என்ற எண்ணத்தை நிறைவேற்றிக் கோள்ள இதைவிட ஒரு சிறந்த சந்தர்ப்பம் வேறு எப்போது கிடைக்கும் ? சந்தடிச்சாக்கில், 'பழைய' எண்ணத்தையும் நிறைவேற்றிவிடுவோமே— என்று காங்கிரசிலுள்ள ஒரு பகுதியினர் தீவிரமாகக் கருதிவருவதன் பிரதிபலிப்புத்தான் இந்தப் புதிய யோசனையும் !"

"இதை எப்படி உங்களால் கூற முடிகிறது ?"

"எப்படியா—சொல்கிறேன் ; 'ஆபத்து— அண்ணா சிலைக்கு' என்ற நிலை, காங்கிரசுக் காரர்கள மூலமதான் ! பல ஆண்டுகள் ஆகியும, கழகததுக்காரர்களால் காமராசர் சிலை மீது ஒரு 'அரசியல் துரும்பு'ம் படவில்லை. அப்படியிருக்க, 'காமராசர் சிலையையும் அப்புறபபடுத்திவிடலாம்' என்று கூறுவது, ஒன்று—காங்கிரசிலேயே உள்ள கோஷ்டிப் பூசலின் திட்டமாக இருக்கலாம்......"

"மற்றொன்று என்ன ?"

"'சிலைக்கு ஊறு விளைவிக்கும் 'கலை'யைப் பெற்றவர்கள் காங்கிரசார்' என்ற அவப் பெயர் ஏற்பட்டுவிடாமல் இருக்கவே காமராசர் சிலையும் சேர்த்துக் கொள்ளப்பட்டிருக்கிறது. இழி செயலை மறைக்கவே இந்த இராசதந்திரம் !"

"ஆகஸ்டு நிகழ்ச்சிகளுக்குப் பின்னர், 'சிலை வேண்டாம்' என்று கூறுபவர்கள், கடைசியாக இராஜாஜி, 'சுயராஜ்பா' இதழில் எழுதியிருப்பதனையும் காட்டி தங்கள் வாதத்துக்கு வலிவு சேர்க்கிறார்களே — இதுபற்றி என்ன கூற முடியும் ?"

"இராஜாஜி, தமது கருத்தினை மிக நன்றாகவே தெளிவுபடுத்தியிருக்கிறார் ; ஆனால், அவரது எண்ணத்தைத் துணைக்கு அழைப்பவர்களிடம் தான் ஒரு தெளிவும் இல்லை. அண்ணாவுக்கு மட்டுமன்று — தமக்கும் சிலை கூடாது என்ற தீவிர — தனிப்பட்ட கருத்துக்கொண்டிருப்பவர் இராஜாஜி. 'உயிருடன் இருப்பவர்களுக்குச் சிலை எதற்கு ?' என்று கேட்டுவிட்டு — அதே போது — காமராசர் சிலையினையும் திறந்து வைத்த நேருகூட, இராஜாஜியின் கருத்தினின்றும் அடிப்படையில் வேறுபடுகிறார். 'இராஜாஜியும் கூறிவிட்டார்' என்பவர்கள், இதனை முதலில் உணர்ந்துகொள்ள வேண்டும். 'அண்ணாதுரைக்கு சிலையா ? இப்போதா ? அதுவும் மவுண்ட் ரோடிலா' என்று கேட்பவர்கள், 'சிலை வைக்கும் வழக்கமே கூடாது' எனக் கூறும் இராஜாஜியின் கருத்தினைத் துணைக்கு அழைத்துக்கொள்வது எந்த வகையிலும் பொருத்தம் இல்லை. அண்ணா சிலைக்கு அத்தகைய ஊறுகள் நிகழாவிட்டால் மட்டும் இராஜாஜி, சிலை வைக்கும் பழக்கத்துக்கு ஒப்புதல் அளிப்பவர் அல்லர் ; இதனையும், இராஜாஜியின் வாதத்தினை மட்டும் சமயத்துக்கு ஒத்துவருவதால் துணைக்கு அழைப்பவர்கள் புரிந்துகொள்ள வேண்டும்."

"சரி ; இந்தப் பிரச்சினை பற்றி உங்கள் எண்ணம்தான் என்ன ?"

"ஒரு நாள் கூத்துக்காக மீசையை எடுத்தவன் கதையாக இது மாறிவிடக்கூடாதே — என்று தான் உள்ளம் பதைக்கிறது ! கட்டுப்பாடு தெரியாத ஒரு சிலரால் — பண்பாடு புரியாத ஒரு சிலரால் — அரசியல் நாகரிகம் வராத ஒரு சிலரால் விளைந்த சிறு சம்பவத்திற்கு, இவ்வளவு பெரிய முக்கியத்துவம் கொடுத்து விவாதிக்கப்படுவதால், 'காலாகாலமாக இருந்து

(3-ம் பக்கம் பார்க்க)

அண்ணாவின் அரும் பணி!

பெரியாரின் பெருமிதம்

மாயூரம், ஆக. 22—

"எனக்குத் தெரிய அண்ணா அவர்கள், பகுத்தறிவுவாதி ; அறிவுக்கு ஒவ்வாதவைகளையெல்லாம் எடுத்துக்காட்டி அவர் கண்டித்திருக்கின்றார்.

"இவ்வாறான பகுத்தறிவாளர் — சமுதாயச் சீர்திருத்தவாதி ஆட்சி இந்தியாவில் வேறு எங்குமே இல்லை.

"இந்த முயற்சி எவ்வளவு பயங்கரமானது — இதன் பலன் என்ன என்பது அவருக்கு நன்கு தெரியும் ; எனினும், தனது சீர்திருத்தப் பணியை நிறைவேற்றிக்கொண்டு வருகிறார்.

"கழக ஆட்சியைக் கவிழ்க்க வேண்டுமென்று காங்கிரசுக் காரர்கள், காலித்தனங்களைச் செய்துகோண்டிருக்கின்றனர் ; என்றாலும், அதுபற்றியெல்லாம் சிறிதும் லட்சியம் செய்யாமல் தனது கோள்கைகளை எப்படி எப்படி நிறைவேற்ற வேண்டுமென்று பார்த்து ஒவ்வோன்றாக நிறைவேற்றி வருகின்றார்."

—மாயூரம் ஊராட்சி ஒன்றிய வரவேற்பு நிகழ்ச்சியில்

தேசீய மாணவர் படை மீண்டும் இயங்குமா?

புரியாத இந்திக் கட்டளைச் சொற்கள் நீக்கப்பட வேண்டும்

இல்லையேல் மாற்றுத் திட்டம் கொண்டு வரப்படலாம்

சென்னை, ஆக. 21—

"இம்மாநில மாணவர்களுக்குப் புரியாத இந்தி மொழியில் கட்டளைச் சொற்கள், தேசிய மாணவர் படையினருக்கு இருப்பதில் பொருளில்லை.

"தேசிய மாணவர் படையினருக்கு ஆங்கிலக் கட்டளை சொற்களைப் பயன்படுத்தி பயிற்சி அளிப்பதற்கெனப் போதுமான அதிகாரிகள் உள்ளனர். ஆங்கிலக் கட்டளைச் சொற்களைப் பயன்படுத்துவதை எவரும் மறுக்கமாட்டார்கள்.

"எந்தக் காரணத்தைக் கருதியாவது ஆங்கிலக் கட்டளைச் சொற்களைப் பயன்படுத்துவதற்கு மத்திய அரசு ஒப்புதல் அளிக்காவிட்டால் தமிழ்நாட்டில் தேசிய மாணவர் படைப் பயிற்சித் திட்டத்தை அறவே கைவிட வேண்டிய அவசியம் ஏற்படலாம்; அதற்குப் பதிலாக உள்ளூர் நிலைமைகளுக்கு ஏற்றதும், குறைந்த செலவு ஆகக்கூடியதுமான மற்றொரு திட்டத்தைக் கொண்டுவரவேண்டிய நிலைமை ஏற்படலாம்.

"இந்திய அரசினரிடமிருந்து ஆதரவான பதில் கிடைக்கும் வரையில், தேசிய மாணவர் படைக்குத் தொடர்பான வகுப்புகளில், உடற்பயிற்சிகளில் அல்லது முகாம்களில் கட்டளையிடும்போது, இந்திச் சொற்கள் எவற்றையும் பயன்படுத்தக் கூடாது என்று தேசிய மாணவர் படை இயக்குநருக்கு ஆணையிடப்பட்டது; இந்தக் கருத்துக்கள் அனைத்தும் மத்திய அரசுக்குத் தெரிவிக்கப்பட்டிருக்கின்றன"

என்று, கல்வியமைச்சர் திரு. இரா. நெடுஞ்செழியன் அவர்கள், சட்டமன்றத்தில் கொண்டுவரப்பட்ட கவன ஈர்ப்புப் பிரச்சினைக்குப் பதிலளிக்கும்வகையில் வெளியிட்ட அறிக்கையில் தெரிவித்துள்ளார். அறிக்கை மேலும் கூறுவதாவது:—

1948-ஆம் ஆண்டு மத்திய தேசிய மாணவர் படைச் சட்டத்தின்கீழ் தேசிய மாணவர் படை அமைக்கப்பட்டது; இந்தத் திட்டம் செயல்படத் தொடங்கியபோது ஆங்கிலத்திலேயே பயிற்சி அளிக்கப்பட்டது. 1957-ஆம் ஆண்டில் பயிற்சி மொழி இந்தி ஆக மாற்றப்பட்டது. இரண்டாண்டிற்கு முன்னர் வரையில், தேசிய மாணவர் படையில் மாணவர்களுக்குக் கற்பிக்கப்படும் பாடங்களும இந்தியிலேயே கற்பிக்கப்பட்டன.

தேசிய மாணவர் படையினருக்கு ஏற்பட்ட இடர்பாடுகளைக் கருதி, தேசிய மாணவா படையில் பயிற்சி மொழி ஆங்கிலமாகவோ அல்லது வட்டாரமொழியாகவோ இருக்குமென அப்போதிருந்த முதலமைச்சர் சட்ட மன்றப் பேரவையில் அறிக்கை விட்டார்; எனினும், தேசிய மாணவர் படை அதிகாரிகள் செய்துகொண்ட முறையீட்டின் பேரிலும், ஆங்கிலக் கட்டளைச் சொற்களை அறிந்த அதிகாரி போதிய அளவில் கிடைக்காமையாலும் கட்டளைக் கொள்கைக்கு மட்டும் இந்தியைப் பயனபடுத்தலாமென்றும், பாடங்களை ஆங்கிலத்திலாவது தமிழிலாவது மாணவர்களுக்குக் கற்பிக்கலாமென்றும் ஒப்புக் கொள்ளப்பட்டன.

1967-ம் ஆண்டு ஆட்சி மொழிச் சட்டம் நிறைவேற்றப்பட்டதிலிருந்து நிலைமை பெரிதும் மாறிவிட்டது; இச் சட்டத்தின்கீழ் எல்லா மாநிலங்களும் மத்திய அரசாங்கத்துடன் அலுவல் நடத்த வேண்டுமென்றால் ஆங்கிலத்தில் அல்லது இந்தியில் நடத்தவேண்டும்.

தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில், இதற்கு, இந்தி ஆட்சி மொழியாக ஏற்றுக்கொள்ளப்படவில்லை.

1967-ம் ஆண்டின் ஆட்சி மொழிச் சட்டமும் அதற்குத் தொடர்பான தீர்மானமும் இந்திய நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டதன் விளைவாகத் தோன்றியுள்ள நிலைமையை இந்தப் பேரவை 1968 சனவரி 23-ம் நாளன்று ஆலோசித்தது; மத்திய அரசின் மொழித் தீர்மானத்தைச் செயல்படுத்தக் கூடாது என்ற இந்த மாநில அரசின் விருப்பத்தையொட்டியும், தமிழ்நாட்டு மக்களும் மாணவர்களும் வெளியிட்ட கருத்துக்களையொட்டியும் தேசிய மாணவர் படையிலும், அதைப் போன்ற படைகளிலும் இந்தி மொழிச் சொற்கள் கட்டளைச் சொற்களாகப் பயன்படுத்தக் கூடாதென்றும், இந்தக் கருத்தை மத்திய அரசு ஏற்காவிட்டால் தேசிய மாணவர் படை கலைக்கப்படவேண்டும் என்றும் இந்தப் பேரவை தீர்மானித்துள்ளது.

இது குறித்து இந்திய அரசுடன் இன்னும் கடிதப் போக்குவரத்து நடந்துவருகிறது; இதில் மாநில அரசின் நிலை கீழே விளக்கப்படுகிறது:—

"முதலாவதாக — ஆட்சி மொழிச் சட்டத்தை நிறைவேற்றியதன்மூலம், மாநில அரசாங்கம் விரும்பும் வரையில் ஆங்கிலத்தை ஆட்சிமொழியாகக் கொண்டிருக்க மாநிலங்களுக்கு உரிமை அளிக்கப்பட்டுள்ளது. எனவே, தேசிய மாணவர் படையில் இந்திக் கட்டளைச் சொற்களை நீடிக்க வேண்டுமென வலியுறுத்துவதற்கு அவசியமில்லை.

"இரண்டாவதாக — மாணவர் படையினருக்கு ஆங்கிலம் அல்லது வட்டார மொழியில் பயிற்சியளிக்கப்படும் அதிகாரிகள் உள்ளனர். இந்தி ஆணைச் சொற்களைத்தான் பயன்படுத்த வேண்டுமென்று வலியுறுத்த அவசியமில்லை.

"மூன்றாவதாக — 1948-ம் ஆண்டு மத்தியச் சட்டம் செயல் அனுமதி வழங்குந் தன்மையில் அமைந்துள்ளது."

தேசிய மாணவர் படையில் சேருவதற்கு, மாணவர் எவரும் கட்டாயப்படுத்தப்படவுமில்லை; இம்மாநிலத்தில் தேசிய மாணவர் படையில் மாணவர்கள் சேர்ந்தாக வேண்டுமென்று மாநில அரசாங்கம் கட்டாயப்படுத்த வேண்டுமென்று இச்சட்டத்தின் கீழ் வலியுறுத்தப்படவுமில்லை.

இம்மாநிலத்தில் எதிர்காலத்தில் தேசிய மாணவர் படை இயங்குவது இந்திய அரசிடமிருந்து வரும் இறுதி மறுமொழியின் தன்மையைப் பொறுத்துள்ளது.

இந்திய அரசு உணர்ச்சி வயப்படாது—இச்சிக்கலைத் தொலைநோக்குடன் ஆராய்ந்து—இந்த அரசாங்கத்தின் கருத்துரையை ஏற்குமென்று நம்பப்படுகிறது.

தேசிய மாணவர் படைக்குப் பதிலாக மாற்றுத் திட்டங்களை செயல்படுத்துவதைப் பொறுத்தவரையில் இந்திய அரசு இரண்டு அமைப்புகளைக் கூறியுள்ளது; தேசியப் படை—தேசிய விளையாட்டு அமைப்பு ஆகிய இரண்டு அமைப்புகள் குறித்துக் கருத்தறிவித்துள்ளது. பல்கலைக் கழகங்களுடன் கலந்து இச்செயற் குறிப்புகள் ஆராயப்பட்டு வருகின்றன. இவை குறித்து நாளடைவில் முடிவு எடுக்கப்படும்."

அறிஞர் அண்ணா 60 ம் ஆண்டு பிறந்த நாள் விழா

இராமநாதபுர மாவட்டச் செயலாளர் வேண்டுகோள்

"வரும் செப்டம்பர் 15-ம் நாள் நடைபெறவிருக்கும் பேரறிஞர் அண்ணா அவர்களின் 60-வது ஆண்டு பிறந்தநாள் விழாவினைப் பொதுக்கூட்டங்கள் மூலமாகவும், ஊர்வலங்கள் மூலமாகவும், கலை நிகழ்ச்சிகள் மூலமாகவும் சிறப்பாகக் கொண்டாடும்படி கழகத் தோழர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

"நகர, பெருநகரங்களில் உள்ள சார்பு மன்றங்கள், விழாவின் சிறப்பு குறைந்திடாதிருக்கும் பொருட்டு நகரச் செயலாளரின் அனுமதியையும், ஆலோசனைகளையும் பெற்று விழாவினை ஏற்பாடு செய்யும்படி கேட்டுக் கொள்கிறேன்"

என, இராமநாதபுரம் மாவட்ட தி. மு. க. செயலாளர் எஸ். எஸ். தென்னரசு அறிவிக்கிறார்.

அண்ணா 60-வது பிறந்த நாள் விழா

சென்னையில் சிறப்பான ஏற்பாடுகள்

இவ்வாண்டு அறிஞர் அண்ணா அவர்களின் 60-வது பிறந்தநாள் விழாவினை சென்னையில் சிறப்புறக் கொண்டாடும் பொருட்டுப் பகுதிச் செயலாளர்கள், மாவட்ட நிர்வாகிகள் அடங்கிய குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

இக்குழு 20-8-68-ல் கூடி, 16-9-68 முதல் 21-9-68 வரை நாளுக்கு இரு கூட்டங்கள்—இரு பகுதிகளில் நடத்துவது என்றும், 22-9-68-ல் மாபெரும் ஊர்வலமும், பொதுக்கூட்டமும் நடத்துவதென்றும், பொதுக்கூட்டத்திற்கு வெளி மாநில அமைச்சர்களையும், தலைவர்களையும் அனைத்துக் கட்சி அடிப்படையில் அழைப்பதென்றும் முடிவு செய்யப்பட்டது.

இங்நிகழ்ச்சிகள் சிறப்புற அமைய நிதிக் குழு, ஊர்வலக் குழு, கூட்ட அமைப்புக் குழு, விளம்பரக் குழு, விளையாட்டுப் போட்டிக் குழு என ஐந்து குழுக்களும் அமைக்கப்பட்டன.

நிதிக் குழு உறுப்பினர்கள்:

டி.கே. கபாலி எம்.சி. (தலைவர்)
மேயர் அபிபுல்லா பேக் எம்.எல் ஏ.
துணை மேயர் பவளவண்ணன்
அரங்கண்ணல் எம்.எல்.ஏ.
அ.பொ. அரசு எம்.எல்.ஏ. (முன்னாள் மேயர்)
வி.எஸ். கோவிந்தராசன் எம்.எல்.ஏ.
டி.கே. பொன்னுவேலு எம்.எல்.சி.
இராசவானந்தம எம்.எல்.சி.
வி. முனுசாமி (முன்னாள் மேயர்)
இரா. சம்பந்தம் (முன்னாள் மேயர்)
சி. சிட்டிபாபு எம்.பி. (முன்னாள் மேயர்)
மைனர்மோசஸ் (முன்னாள் மேயர்)
பி.கே. மாரியப்பன்
என்.எஸ். தேவராசன் (முன்னாள் துணை மேயர்)
இரா. ஆறுமுகம் எம்.சி.
மோகனரங்கம் எம்.சி.
சா. கணேசன் எம்.சி.
ஓ.எஸ். பாலசுந்தரம்
கே.எஸ். தினகரன்

"ஏனைய குழு உறுப்பினர் விவரம் பின்னர் அறிவிக்கப்படும்"

என்று மாவட்டச் செயலாளர் நிலநாராயணன் அறிவிக்கிறார்.

கள்ளக்குறிச்சி கூட்டுறவு சர்க்கரை ஆலை லிமிடெட்,
மூங்கில்துறைப்பட்டு அஞ்சல், தென் ஆற்காடு மாவட்டம்

ஆலையின் உற்பத்தித் திறனை 1000 டன்னிலிருந்து 1,250 டன்னுக்குப் பெருக்குவதற்காகப் புதிய பங்குகள் சேர்க்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

இக்கூட்டுறவு நிறுவனத்தின் விவகார எல்லையில் தென் ஆற்காடு மாவட்டம் கள்ளக்குறிச்சி தாலுக்காவும்—திருக்கோயிலூர் தாலுக்காவில் எலவானூசூர், உளுந்தூர்பேட்டை, திருக்கோயிலூர், மணலூர்பேட்டை ஆகிய நான்கு பிர்க்காக்களும்—வட ஆற்காடு மாவட்டத்திலுள்ள திருவண்ணாமலை, செங்கம் ஆகிய இரண்டு தாலுகாக்களும் அடங்கியுள்ளன.

இதில் திருக்கோயிலூர் பிர்க்காவிலுள்ள புதுப்பாளையம், குன்னத்தூர், கொடியூர், வீரணம்புத்தூர், பாவந்தூர், அக்கனூர், பெண்ணைவலம் ஆகிய கிராமங்களும்—உளுந்தூர்பேட்டை பிர்க்காவில் திருவெண்ணெய்நல்லூர்—உளுந்தூர்பேட்டை ரோட்டிற்குக் கிழக்கில் உள்ள கிராமங்கள் நீங்கலாக மற்ற கிராமங்களில் இருப்பவர்கள்—புதிதாக ஆலையில் பங்கு எடுத்துக்கொள்ள விரும்பும் நபர்களும், ஏற்கனவே ஆலையில் அங்கத்தினர்களாக இருப்பவர்கள் மேற்கொண்டு பங்குகள் தேவையாக இருப்பின் அவர்களும் 21—9—68-ந் தேதி மாலை 5 மணிக்குள் ஆலையில் ஒரு பங்குக்காக ரூ. 255 விதம் தொகையைச் செலுத்தி மனுச் செய்துகொள்ளலாம்.

என். சீனிவாசன், பி.ஏ.
பொது நிர்வாகி

சூரிய ஒளி — கடல் அலை மூலம் மின்சார உற்பத்தி

அமைச்சர் நெடுஞ்செழியன் விளக்கம்

சென்னை, ஆக. 21—

'சூரிய வெப்பத்திலிருந்தும் கடல் அலைகளிலிருந்தும் மின்சார உற்பத்தி செய்யும் முறை பற்றி அரசு ஆராயும் நோக்கமில்லை; அதற்கான வசதிகள் இங்கு இல்லை"

என்று கல்வி — தொழில் அமைச்சர் இரா. நெடுஞ்செழியன், சட்டமன்ற மேலவையில், கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில் கூறினார். அவர் மேலும் குறிப்பிட்டதாவது:—

"கடல் அலையிலிருந்து பிரான்சு நாட்டில் மின்சாரம் எடுக்கப்படுகிறது; நம் மாநிலத்தில் இது போல மின்சாரம் உற்பத்தி செய்ய முடியுமா என்று முன்னாள் தொழிலமைச்சர் முயற்சி செய்தார்; 'அலையின் உயரம் 25 அல்லது 30 அடி இருந்தால்தான் மின்சக்தி உற்பத்தி செய்ய முடியும்; தமிழ்நாட்டில் கடல் அலை 3 அடி உயரம்தான் இருக்கிறது' என்று நிபுணர்கள் தெரிவித்தார்கள்; மேலும், கரை ஓரத்திலும் மிகுந்த ஆழம் இருக்க வேண்டும்; இந்த வசதிகள் நமக்கில்லை.

"சூரிய ஒளியிலிருந்து மின்சாரம் எடுக்கும் முயற்சி இன்னும் மேலை நாடுகளில் பரிசீலனைக் கட்டத்திலேயேயுள்ளது.

"நம்மைப் பொறுத்த வரையில் நீர் மின்சக்தியையும், அனல் மின்சாரத்தையும் பயன்படுத்திய பிறகே கடல் அலைகளிலிருந்து மின்சார உற்பத்தி செய்வது பற்றிக் கவனிக்க வேண்டி ஏற்படலாம்; இப்போதைக்கு இது அவசியமில்லை."

சி. வி. இராசகோபால்:—"மாட்டுச் சாணத்திலிருந்து மின்சாரம் எடுக்கமுடியும் என்கிறார்களே?'

முதலமைச்சர் அண்ணா:—"நமக்குத் தேவைப்படுகின்ற மின்சாரம் முழுவதையும் மாட்டுச் சாணத்திலிருந்தே எடுக்க வேண்டுமென்றால், மனிதர்களின் எண்ணிக்கையைக் குறைத்துவிட்டு, நாடு முழுவதும் மாடுகள்தான் வளர்க்க வேண்டிவரும்."

கல்வி—தொழில் அமைச்சர்

இரா. நெடுஞ்செழியன்

நிகழ்ச்சிகள்

ஆக. 25 காலை 10 மணி: சேலம் மாவட்ட சிறுதொழில் வளர்ச்சிக் கருத்தரங்கு நிறைவு விழா; மாலை 4-30 மணி: கொமாரபாளையம்—ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி வரவேற்பு; 5-30 மணி: சிறு தொழில் சொந்தக்காரர் கருத்தரங்கம்; 7-30 மணி: கொமாரபாளையம் பொதுக்கூட்டம்.

சிலைகள் பற்றிச் சில....!

(2-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

வரும் ஒரு முறை, நன்றியினைக் காட்ட — பாராட்டினைத் தெரிவிக்க — அவ்வப்போது பார்த்து மகிழ — சிந்திக்க — மனம் தெளியப் பயன்படும் சிலை வைப்பு என்ற பழக்கம் எங்கே ஆபத்துக்குள்ளாகிவிடுமோ' என்றுதான் அஞ்சவேண்டியிருக்கிறது! 'துஷ்டனைக் கண்டால் தூர விலகு; சேற்றினைக் கண்டால் எட்டி நட' என்ற உபதேசங்களெல்லாம், இந்தப் பிரச்சினையில் ஓரளவுக்குத்தான் ஒத்து வரும்! சேற்றைக் கண்டு ஒதுங்கியே போவதென்றால், ஊரெல்லாம் சேருகத்தான் மாறும்! துஷ்டனைக் கண்டால் தூர விலகிக்கொண்டுதான் இருக்கவேண்டுமென்றால், கடைசியில் துஷ்டர்கள்தான் மிஞ்சுவார்கள்! காடு வேறாகவும் நாடு வேறாகவும் இருந்தும்கூட, மிருகங்கள் அவ்வப்போது ஊருக்குள் வருகின்றனவே என்பதற்காக, வீடுகளைப் பிரித்துக்கொண்டு வேறிடமா சென்றுவிடுகிறோம்? பண்பாடு — நாகரீகம் — கட்டுப்பாடு தெரியாத அரசியல் கட்சிக்காரர்களை, ஒன்று — திருத்த முன்வரவேண்டும்; அல்லது பகிஷ்கரிக்கவேண்டும்; இரண்டையும் விட்டு அவர்களது அவலச் செயல்கள் பற்றி மிகப் பெரிதுபடுத்தி விவாதிப்பதே அவர்களை மேலும் உற்சாகப்படுத்தும். அத்துடன், அவர்களது அநாகரிகச் செயலுக்கு வெற்றியும் கிட்டுகிறதென்றால், பின் — நாடு காடாகும்! வீதிகள் சகதிகளாகும்!"

பேரறிஞர் அண்ணா 60-ம் ஆண்டு பிறந்த நாள் விழா

செப். 15 தொடங்கி 30-ம் நாள் வரை நாடெங்கும் கொண்டாடுக!

அமைப்புச் செயலாளர் வேண்டுகோள்

நாட்டின் முதல்வர் --- நம் கழகத்தின் தனிப் பெருந்தலைவர் --- அண்ணா அவர்களின் 60-வது ஆண்டு பிறந்த நாள் விழாவினை செப்டம்பர் 15-ம் நாள் முதல் செப்டம்பர் திங்கள் இறுதிவரை சிற்றூர், பேரூர், நகரம், பெருநகரம், வட்டம், மாவட்டம் ஆகிய கழகத்தின் எல்லா அமைப்புக்களும் சீரும் சிறப்பு மாகக் கொண்டாடுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

அறிஞர் அண்ணா அவர்கள் தமது பொதுவாழ்வின் மூலம் நம் நாட்டின் நல்வாழ்வுக்கும், ஏழை--எளிய மக்களின் ஏற்றத்திற்கும் அயராது பாடுபட்ட தன்மைகளை நாடு நன்கு உணர்ந்திருக்கிறது.

நாட்டின் சமுதாயத்துறை ---அரசியல் துறை --- தொழிலாளர்துறை --- கலைத்துறை --- கல்வித்துறை உள்ளிட்ட எல்லாத் துறைகளிலும் அண்ணா அவர்கள் ஈடுபாடு கொண்டு நாட்டுக்கே தனிச் சிறப்பை ஏற்படுத்தியிருக் கிறார்கள் என்பதை இன்று உலக நாடுகளும் உணர்ந்து பாராட்டுகின்றன.

இவ்விதப் புகழுக்குரிய நம் அண்ணா அவர்களின் 60-வது ஆண்டு பிறந்த நாள் விழாவினை வரலாற்றுச் சிறப்புமிக்கதாகக் கொண்டாட வேண்டுவது நம் ஒவ்வொருவரின் நீங்காக் கடமையாகும்.

விழா நாட்களில்...

★ அறிஞர் அண்ணா அவர்களின் எழுத்தோவியங்களை வெளியிட்டு எங்கும் பரப்புதல்;

★ அறிஞர் அண்ணா அவர்களின் சொற்பொழிவுகளைப் பதிவு செய்து வைத்திருப்போர், பட்டிதொட்டிகளிலெல்லாம் ஒலி பரப்புதல்;

★ அறிஞர் அண்ணா அவர்கள் வழங்கியுள்ள நாடகங்களை நாடெங்கும் எளிய முறையிலும், சீரிய தன்மையிலும் நடித்துக் காட்டுதல்;

★ அறிஞர் அண்ணா அவர்களின் தொழிலாளர் நலன் பேணும் கொள்கைகளைப் பாட்டாளித் தோழர்களிடையே பரப்புதல்;

★ அறிஞர் அண்ணா அவர்கள் மொழிக் கொள்கையின் மூல மாகக் கண்ட வெற்றியினை நாடெங்கும் முழக்குதல்;

★ அறிஞர் அண்ணா அவர்களைத் தலைவராகக்கொண்டு இயங்கும் தமிழக அமைச்சரவையின் சாதனைகளை எவரும் அறியும் வண்ணம் எடுத்துரைத்தல்;

★ ஏழை -- எளியவர்களுக்கு உணவும், உடையும், இன்ன பிற உதவிகளையும் வாரி வழங்குதல்;

★ பள்ளிச் சிறுர்களுக்குப் பலகை, புத்தகம், இனிப்பு ஆகியன வழங்குதல்;

★ ஊரெங்கும் --- நாடெங்கும் ஊர்வலங்களும், விழாக் கூட்டங் களும் சிறப்புற நடத்துதல்;

★ வீடெங்கும் --- வீதியெங்கும் வண்ணக்கோலமிட்டும், கழகக் கொடிகளை ஏற்றியும், தோரணங்களைக் கட்டி அலங்கரித்தும், அண்ணா--அண்ணியார் ஆகியோருடைய திருவுருவப் படங்களை அலங்கரித்தும் விழாக் கொண்டாடுதல் ---

போன்ற செயல்முறைகளின் வாயிலாக --- அண்ணா அவர்களின் 60-வது ஆண்டு பிறந்த நாள் விழாவினை ஊரும் உலகமும் போற்றும் வகையில் கொண்டாடுவதற்கு இன்றே முனைந்து அதற்கான ஏற்பாடுகளை மேற் கொள்ளுமாறு கழகத்தின் எல்லா அமைப்புகளையும், கழகச் சார்புடைய எல்லாத் துணை அமைப்புகளையும், நிறுவனங்களையும், கழக ஆதரவாளர் களையும் விரும்பி வேண்டிக் கேட்டுக்கொள்கிறோம்.

'அறிவகம்', சென்னை-13
20—8—1968

என். வி. நடராசன்,
அமைப்புச் செயலாளர் (தி.மு.க.)

'சேனை'களின் நடவடிக்கைகள்

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

அரசு யோசனை செய்துவரு கிறது"

என்று நாடாளுமன்ற மேலவை யில் அமைச்சர் கே. சி. ஷா, சிவசேனையின் அட்டூழியம் பற்றிக் கேட்கப்பட்ட கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில் தெரிவித்தார்.

ஒசூர் வட்ட தி. மு. கழகத் தேர்தல்

ஆணையாளர்:
கே. எம். கண்ணபிரான்

25—8—68 அன்று காலை 10-மணிக்கு ஒசூர் பயணிகள் விடுதியில் நடைபெறும் ஒசூர் வட்ட தி. மு. கழகத்திற்கான அவைத் தலைவர், துணைச் செயலாளர், மாவட்டப் பிரதி நிதிகள் இரண்டு பேர் ஆகிய பொறுப்புகளுக்கான தேர் தலை நடத்திவைக்கும் தேர்தல் ஆணையாளராகத் தோழர் கே. எம். கண்ணபிரான் அவர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்.

—தலைமைக் கழகம் (தி.மு.க)

ஒரு நாட்டுக்கு மனச்சாட்சி உண்டென்றால்...!

மக்களவையில் செ. கந்தப்பன் வற்புறுத்தல்

புதுடில்லி, ஆக. 22—

செக்கோஸ்லோவேகியா மீது இரஷ்யா படையெடுத்திருப் பதைக் கண்டித்துக் காங்கிரசு உறுப்பினர் சுசேதா கிருபளானி, மக்களவையில் ஒரு திருத்தத் தீர்மானம் கொண்டுவந்திருந்தார்; இத்தீர்மானத்தில், 'இரஷ்யாவின் நடவடிக்கையில் இந்தியா மிகுந்த கவலை கொள்கிறது' என்று கூறப்பட்டிருந்தது. இதன்மீது பேசிய கழக உறுப்பினர் செ. கந்தப்பன் இத்தீர்மானத்திற்கு ஒரு திருத்தம் கொண்டுவந்தார்; அதில் அவர், 'கவலை கொள்கிறது' என்பதற் குப் பதிலாக, 'அதிர்ச்சி அளிக்கிறது' என்பதாக மாற்ற வேண்டு மென்று வற்புறுத்தியிருந்தார்.

மேலும் அவர், 'ஐ. நா. அவையில் செக்கோஸ்லோவேகியா வுக்கு ஆதரவு தந்து தீவிரமாகச் செயல்பட வேண்டும்' என்றும் கூறினார்.

"ஒரு நாட்டுக்கு மனச்சாட்சி உண்டென்று காட்ட வேண்டு மென்றால், அது, ஒரு நாட்டு மக்களுக்கு நெருக்கடி நேரும்போது அம்மக்களுக்கு அனுதாபம் காட்டுவது மூலமாகவே வெளிப்படுத்த வேண்டும்" என்றும் கேட்டுக்கொண்டார்.

கடமையிலிருந்து நழுவியவர்களாவோம்!

தீர்மானத்தை ஆதரித்துப் பேசிய ஆச்சாரியா கிருபளானி அவர்கள் குறிப்பிட்டதாவது:—

"அண்மையில் இரஷ்யாவுக்கும் —செக்கோஸ்லோவேகியா வுக் கும் ஓர் ஒப்பந்தம் ஏற்பட்ட நிலையில் திடீரென இப்படித் தாக்குதல் நடத்தியிருப்பது, உல கப் போரின்போது ஜப்பானுக் கும் — அமெரிக்காவுக்கும் ஓர் ஒப்பந்தம் ஏற்பட்டும் கூட, எதிர பாராத நிலையில் ஜப்பான், பெர்ல் துறைமுகத்தைத் தாக் கிய செயலுக்கு எள்ளளவும் குறைந்ததல்ல!

"நாம் இதைக் கண்டிக்கவில்லை யானால், கடமையிலிருந்து நழு வியவர்களாவோம். நாம் சில மரபுகளை வகுத்துக் கொண்டுள் ளோம். அதை நிச்சயமாக நாம் காப்பாற்றி வரவேண்டும்."

ஸ்டாலின் காலத்தை நோக்கிச் செல்கிறது!

தீர்மானத்தை ஆதரித்துப் பேசிய சுதந்தரா உறுப்பினர் மசானி குறிப்பிட்டதாவது:—

'இரஷ்யாவின் நடவடிக்கை பச் சையான ஆக்கிரமிப்பாகும். இரஷ்யாவின் கொள்கை ஸ்டா லின் காலத்தை நோக்கிச் சென்றுகொண்டிருக்கிறது; மேலும், மா சே-துங்கின் கொள் கையை நெருங்கிக் கொண்டி ருக்கிறது."

அசோக் மேத்தா பதவி விலகல்

புதுடில்லி, ஆக. 22—

மத்திய பெட்ரோலியம் — இரசாயன அமைச்சர் அசோக் மேத்தா, இன்றிரவு திடீரெனப் பதவியிலிருந்து விலகிக்கொண்டார்.

செக்கோஸ்லோவேகியாவில் இரஷ்யா படையெடுத்தது சம்பந்தமான பிரச்சினையில், அரசுடன் ஏற்பட்ட கருத்து வேறுபாட் டின் காரணமாகவே அசோக் மேத்தா பதவியிலிருந்து விலகினார்.

இதற்கு முன்னதாக மக்களவை யில், 'செக்கோஸ்லோவேகியா வில் இரஷ்யாவின் தலையீடு, ஐ. நா. சாசனத்துக்கு முரணானது' எனக் கண்டித்துக் காங்கிரசு உறுப் பினர் சுசேதா கிருபளானி கொண்டுவந்த தீர்மானத்தை ஆத ரித்து---கம்யூனிஸ்டு அல்லாத எதிர்க் கட்சிகளுடன் சேர்ந்து--- அசோக் மேத்தா ஓட்டளித்தார்.

கட்சிக் கொறடாவைமீறி மற் றும இரு காங்கிரசு உறுப்பினர் களும் பிரேரணைக்கு ஆதரவாக வாக்களித்தனர்.

மக்களவையில், இரஷ்யாவின் நடவடிக்கையை, வலதுசாரிக் கம் யூனிஸ்டுகளைத் தவிர இதர கட்சி களின் தலைவர்கள் அனைவரும் வன்மையாகக் கண்டித்தனர்.

நான்கு மணி நேர விவாதத்துக் குப்பின்னர், சுசேதா கிருபளாணி யின் பிரேரணையை சபை நிரா கரித்துவிட்டது.

"வார்சா ஒப்பந்த நாடுகளின் நடவடிக்கை, மனித உரிமைகள் பற்றிய ஐ.நா. சாசனத்தை மீறிய ஒன்றாகும்" என்று சுசேதாவின் பிரேரணை கண்டிக்கிறது.

நடக்க இருப்பவை

24--8--68

கோதண்டராம பட்டணம்

தி.மு.க. சார்பில் மாலை 6-30 மணிக்கு அண்ணா திடலில்; தலைவர்: கே. அரிதாசு; கொடி யேற்றுபவர்: தமிழ்க் குடிமகன் எம்.ஏ.; பேசுவோர்: மாங்குடி மதியழகன், பறம்பை நாகலிங்கம், இல. மு. சாமி, மு. கருமலையான், கா. இராமசாமி, மற்றும் பலர்.

துவாகுடிமலை

தி.மு.க. சார்பில் பாராட்டு விழா; மாலை 6 மணிக்கு கடை வீதி அருகில்; தலைவர்: கா. வீர புத்திரன்; பேசுவோர்: கேரள சுந்தரம், கு. காமாட்சி, கூ. மு. பெரியசாமி, கு. சிங்காரவேலு, அன்புமணி, து. ப. கலியபெரு மாள், தி. கா. மஸ்தான்.

சென்னை 10-வது வட்டம்

கலைஞர் கருணாநிதி நற்பணி மன்றச் சார்பில் மாலை 7-மணிக்கு மணிகண்ட முதலி 6-வது தெரு வில்; தலைவர்: கே, சி. ஆறு முகம்; பேசுவோர்: ப. உ. சண் முகம் எம். எல். சி., ஆலடி அருணா எம்.எல்.ஏ., மு வேதா சலம் எம்.எல்.ஏ., ந. தமிழன்பன், ஆடலரசன், இராசமன்னர், மற் றும் பலர்.

சென்னை 29-வது வட்டம்

கலைஞர் கருணாநிதி மன்றத் துவக்க விழா — உணவு அமைச் சர் கே. ஏ. மதியழகன் அவர் களுக்குப் பாராட்டு; மாலை 7-மணிக்கு பெத்துநாயக்கன் பேட்டை கிருட்டினப்ப நாயக் கன் குளக்கரை அருகில்; தலைவர்: சி. எஸ். கணேசன்; பேசுவோர்: அமைச்சர் கே. ஏ. மதியழகன், சட்டமன்ற உறுப் பினர்கள் எம். ஆர். கண்ணன், வி. எஸ். கோவிந்தராசன், பெ. சீனிவாசன், மற்றும் ம. மோகன ரங்கம் எம்.சி., அரு. சக்கர பாணி, சி. ஜி. இராதாகிருட் டினன்.

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக, திரு. இரா. செழியன் எம்.ஏ., எம்.பி., அவர்களை ஆசிரியராகவும், வெளியிடு பவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு [illegible] அச்சகத்தில் (24, சூரியநாராயண செட்டித் தெரு, சென்னை-13) அச்சிட்டு வெளியிடப்பெறுகிறது.